**சுருக்கம்**

நினைவகங்கள் – தருமபுரியில் அதியமான் கோட்டம் மற்றும் திருமண மண்டபம் அமைத்தல் - நில மதிப்பீடு ரூ.1,28,253/- ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**செய்தி (ம) சுற்றுலா (நினைவகங்கள்)த்துறை**

அரசு ஆணை (நிலை) எண். 203
நாள்:29.8.2003

படிக்கப்பட்டது

10.4.2003 நாளிட்ட 23/3353/98 எண்ணிட்ட தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம்

-------

ஆணை:

தருமபுரி மாவட்டம் அதியாமான் கோட்டை கிராமத்தில் "அதியமான் கோட்டம்" மற்றும் திருமண மண்டபம் ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம்) செலவில் அமைக்கப்படும் என, முன்னாள் செய்தி விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலேயே தெரிவித்தார்கள்.

2. இது குறித்து, தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் நிலம் தெரிவு செய்து, அரசின் ஒப்புதலுக்கென அனுப்பினார்கள். உரிய ஆய்வுக்குப் பின்னர் கீழ்க் குறித்த நிலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்துவதென அரசு முடிவெடுத்தது.

| புல எண். | பரப்பளவு |
|---|---|
| 813/1எ1 | 0.23.0 |
| 815/1 | 0.18.5 |
| 816 / 2பி | 0.39.5 |
| | 0.81.0 ஹெக்டேர் |

3. ஆனால் இந்நிலங்கள் திருக்கோயிலுக்குச் சொந்தமானது என்றும், நிலத்தில் முன்நுழைவு செய்வதற்கு முன் ரூ.1,28,253/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) திருக்கோயில்களுக்கு செலுத்திவிடவேண்டும் என்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் தெரிவித்தார். இந்தப் பணத்தைச் செலுத்த நிதித்துறை தனது ஒப்புதலை அளித்துள்ளது.

4. இந்நிலையில், தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டை கிராமத்தில் அதியமான் கோட்டம் மற்றும் திருமண மண்டபம் கட்ட ஏதுவாக நிலத்தின் மதிப்பான ரூ.1,28,253/- ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) செலுத்த, அரசு ஒப்புதல் அளிக்கிறது. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு அவர்கள், இந்தப் பணத்தை திருக்கோயில் பெயரில் நிரந்தர வைப்புத் தொகையாக (எப்.டி) திருக்கோயில் நடைமுறை நிர்வாகியால் முதலீடு செய்ய ஏதுவாக அவரிடம் செலுத்த வேண்டும்.

5. மேலே பத்தி 4 —ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

“4220 — செய்தி விளம்பரம் குறித்த மூலதனச் செலவு — 60. ஏனையவை — 051. கட்டுமானம் I - திட்டத்தில் சேராதது — AC கட்டிடங்கள் — 64. நிலங்கள்

(த.தொ.கு.எண்.4220 60 051 AC 6409)

6. 2003 — 2004 திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தினை எதிர்நோக்கி பட்டியல் சமர்ப்பிக்கப்படும் பொழுது அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் பட்சத்தில் அதனை அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்ட கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தை திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்க்க தக்க செயற்குறிப்பினை உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. தொகையைப் பெற்றவுடன், நிலத்தின் நுழைவு அனுமதி வழங்க இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.48473/Fin/CF&CP/03 நாள் 29.8.2003 ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரடு எண்.416.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ.ராமதாஸ்
அரசு செயலாளர்

பெறுநர்

1. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை — 9
2. ஆணையாளர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை
3. மாவட்ட ஆட்சியர், தருமபுரி
4. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை — 5
5. நடைமுறை நிர்வாகி, அருள்மிகு பத்ரகாளியம்மன், ஓசமாமுனியப்பன் அருள்மிகு காளியம்மன் தலைக் கண்ணியம்மன் திருக்கோயில்கள், அதியமான் கிராமம், தருமபுரி
6. மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி
7. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி
8. கருவூல அலுவலர், தருமபுரி
9. நிதி (வசெபெ I/II ) துறை, சென்னை — 9.
10. சம்பள கணக்கு அலுவலர், சென்னை — 9.
11. சம்பள கணக்கு அலுவலர், சென்னை — 9. (பட்டியலுடன்)
12. மாநில கணக்காய்வு தலைவர், சென்னை — 9/18/35.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்பு செலயாளர் / பிரிவு அலுவலர்